மின்னஞ்சல் கடிதம்

வேலைவாய்ப்பு வேண்டி மின்னஞ்சல் கடிதம் ஒன்று எழுதுக.

அனுப்புநர்: மதி 2022@ஜிமெயில்.காம்

பெறுநர்: தினத்தந்தி56@ஜிமெயில்.காம்

நாள்: 06-08-2022

பொருள்: வேலைவேண்டி விண்ணப்பம்

மதிப்பிற்குரிய ஐயா,

வணக்கம். நான் எம்.ஏ இதழியல் சென்னைப் பல்கலைக் கழகத்தில் படித்துள்ளேன். முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்றுள்ளேன். நான்கு ஆண்டுகள் வேறு ஒரு பத்திரிகையில் பத்திரிகையாளராகப் பணியாற்றியுள்ளேன்.

தற்போது தங்கள் பத்திரிகை அலுவலகத்தில் பத்திரிக்கையாளர் பணிக்கு ஆட்கள் தேவை என்ற விளம்பரத்தைப் பார்த்தேன். அப்பணியை எனக்குத் தந்து உங்கள் பத்திரிக்கையில் பணியாற்றும் நல்வாய்ப்பினை வழங்குமாறு மிகவும் பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

நன்றி,

இப்படிக்கு

உண்மையுள்ள,
மதி

இணைப்பு: மதிப்பெண் சான்றிதழ்
மாற்றுச் சான்றிதழ்
அனுபவச் சான்றிதழ்